என்னை
அளவுக்கு
...ட்டப்பேரவை
...ரும்பான்மை
...ற்று திமுக
இவ்வாறு

தொகுதிக்கு உட்பட்ட போலீஸார் காஞ்சிபுரம் மக்கள் நல்வாழ்வுக் கூடத்திலும் தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர்.

இதேபோல் ஆலந்தூர், ஸ்ரீ பெரும்புதூர் தொகுதிகளிலும் அந்தந்த தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்களில் வாக்குப் பதிவு நடைபெற்றது.

ஆலந்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் நங்கநல்லூரில் உள்ள பிரில்லியண்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச் சாவடியிலும், ஸ்ரீபெரும்புதூர் சட்டப்பேரவைத் தொகுதியில் வல்லம் அங்கன்வாடி மையத்திலும், உத்திரமேரூர் சட்டப்பேரவைத் தொகுதியில், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலும், காஞ்சிபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில், செவிலிமேடு அரசு ஊழியர் குடியிருப்பில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியிலும் இந்த மகளிர் வாக்குச் சாவடிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்குச் சாவடி முழுவதும் இளஞ்சிவப்பு நிறத்தில் வடிவமைக்கப்பட உள்ளது.



▲ காஞ்சிபுரம் பகுதியில் மாதிரிக்காக உருவாக்கப்பட்டுள்ள பெண்கள் வாக்குச் சாவடி.

...குழந்தைகளுக்கான

# ...விளையாட்டு ஆய்வகம் திறப்பு



...வளமுற்றோர் மேம்பாட்டுக்கான தேசிய நிறுவனத்தில் ...மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான விளையாட்டு ஆய்வகத்தை திறந்துவைத்து அறக்கட்டளை ...டனர்.

...த்தால் பாதிக்
...விளையாட்டு
...ற்று விளை
...றியமைக்கப்
ஆய்வகம்
...
...டு ஆய்வகத்
...று முன்தினம்

நடைபெற்றது. இதில், அறக்கட்டளையின் உறுப்பினர் நாராயணன் பங்கேற்று திறந்து வைத்தார்.

மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சக்கர நாற்காலி இயக்கம், நடைபயிற்சி ஆகியவற்றுக்கு விளையாட்டின் மூலம் பயிற்சியளிக்கவும் மேம்படுத்தவும் இந்த மாற்றியமைக்கப்பட்ட விளையாட்டு ஆய்வகம் உதவியாக இருக்கும்.

இந்த ஆய்வகத்தில் உள்ள விளையாட்டு பொருட்கள் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கண், கை ஒருங்கிணைப்பு, விரல் திறமை, இயக்கம் போன்ற திறமைகளை மேம்படுத்தும்.

மேலும், இந்த விழாவில் மாற்றியமைக்கப்பட்ட விளையாட்டு சாதனங்களை உள்ளடக்கிய ஆய்வகத்தை தொடர்ந்து மேம்படுத்தவும் புதிய சாதனங்களை வாங்கவும் தேசிய நிறுவனத்தின் இயக்குநர் நச்சிகேட்டா ரௌட் மற்றும் இன்னர்வீல் ட்ரென்த் டிரஸ்ட் நிர்வாகி விஜி சுவாமிநாதன் ஆகியோர் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிகழ்ச்சியில், அறக்கட்டளையின் துணை பதிவாளர் (பொறுப்பு) முனைவர் அமர்நாத், உறுப்பினர் ரணிஷ் ஹரன், தேசிய நிறுவனத்தின் விரிவுரையாளர் லீலாவதி மற்றும் உறுப்பினர்கள், மாற்றுத்திறனாளிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# சவரத் தொழிலாளர் சங்கத்தினர் திமுக கூட்டணிக்கு ஆதரவு

■ திருப்போரூர்

சவரத் தொழிலாளர்களின் நீண்டநாள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளதால், திமுக கூட்டணிக்கு ஆதரவளிப்பதாக தமிழ்நாடு சவரத் தொழிலாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட தமிழ்நாடு சவரத் தொழிலாளர் சங்கம் கேளம்பாக்கம் அடுத்த மேலக்கோட்டையூர் பகுதியில் அமைந்துள்ளது. இச்சங்கம் சவரத் தொழிலாளர்களின் நலன் சார்ந்த பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், சங்கத்தின் செயலாளர் ருக்மாங்கதன் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதில், மருத்துவ நாவிதர் சமுதாயத்துக்கு கல்வி வேலைவாய்ப்புகளில் உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும். அமைப்புசாரா நலவாரியத்தில் முடிதிருத்தும் தொழிலாளர்களின் உதவி தொகையை உயர்த்தி வழங்க வேண்டும்.

### அரசு ஊழியராக்க கோரிக்கை

கோயில்களில் பணிபுரியும் தவில், நாதஸ்வர இசைக் கலைஞர்கள், மொட்டை அடிக்கும் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை கடந்த பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம்.

இந்த கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் திமுக கூட்டணியின் 2021 சட்டப்பேரவை தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதனால், சவரத் தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

எனவே, நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணிக்கு தமிழ்நாடு சவரத் தொழிலாளர்கள் சங்கம் ஆதரவளிக்கிறது என அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

Hindu Tamil - 27.03.2021

# ...குடமுழுக்கு நடத்தப்படும்

## ...திண்டுக்கல் லியோனி தகவல்

...து, திருத்தணி
... திருத்தணி,
...பஜ்ஜிரெட்டி
...திருவள்ளூர்
...திருப்பாச்சூர்
...தீவிர வாக்குச்
...ார்.
...திருத்தணியில்
...ல் ஈடுபட்ட
...கள் மத்தியில்
...
...ாலத்தில்தான்
...ாயில்களுக்கு
...டமுழுக்குகள்
...இந்து கோயில்

களை புனரமைக்க ரூ.1,000 கோடி ஒதுக்கப்படும் என திமுக தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருத்தணி முருகன் கோயில் ராஜகோபுரம் அமைக்கும் பணி திமுக ஆட்சியில் தொடங்கப்பட்டதால், அப்பணி முடிந்தும் அதிமுக அரசு குடமுழுக்கு நடத்தாமல் உள்ளது.

ஆகவே, திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் முதல்வரானதும் திருத்தணி முருகன் கோயில் குடமுழுக்கு நடத்தப்படும். அதற்கு உதயசூரியனுக்கு வாக்களித்து சந்திரனை சட்டப்பேரவைக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.


வரி விளம்பரங்கள்

திருமணசேவை மையம்

1000 days Validity- Free Benefits One Time Regn. Fees Rs.1000. www.brahminkalyanam.com. hindusmatri.com. 89397 02500

வாடகை

வாடகைக்கு

West Mambalam 2BHK,FF,IstK,veg fmly, NCP, Chakrapani str ext. 9791184236.

Ekkattuthangal- 3BHK, 1700sq. ft, 2 CCP, Semi-furn, Lift, Power bkup,Ct. 9971086589



இன்டெலக்ட் டிசைன் அரினா லிமிடெட்

(CIN: L72900TN2011PLC080183)

பதிவு அலுவலகம் : 244, அண்ணா சாலை, சென்னை – 600 006

கார்ப்பரேட் அலுவலகம் : மனை எண், 3/G–3, சிப்காட் தகவல் தொழில்நுட்ப பூங்கா, சிறுசேரி, சென்னை – 600 130 மின் அஞ்சல் : company.secretary@intellectdesign.com

இணையதளம் : www.intellectdesign.com தொலைபேசி : 044-6615 5100, பேக்ஸ் : +91-44-6615 6123

அறிவிப்பு

2013 நிறுவனங்கள் சட்டம் பிரிவு 201–ன் படி, முழு நேர இயக்குநராக திரு. அனில் குமார் வர்மா – வை (DIN : 01957168) 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1 ஆம் தேதி முதல் ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு மறு நியமனம் செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்ற ஒரு விண்ணப்பமானது, 2013 நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 196, 197 அட்டவணை V மற்றும் பொருந்துகிற கூறுகளின் கீழ் மத்திய அரசுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது என்று இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. மேலும், மேற்குறிப்பிட்ட நபர் வெளிநாடு வாழ் நபராக இருப்பதாலும் இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மறு நியமனத்திற்கு நியமனம், ஊதியம் & இழப்பீடு குழுவாலும், இயக்குநர் குழுவாலும் பிப்ரவரி 2, 2021 அன்று நடைபெற்ற இயக்குநர் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒப்புதல், எதிர்வரும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கும் மத்திய அரசின் இசைவுக்கும் உட்பட்டதாகும்.

இந்த அறிவிப்பில் அடங்கியிருக்கும் வரைவு திட்டத்திற்கு எந்த ஒரு நபருக்காவது ஏதேனும் ஆட்சேபனை இருக்குமேயானால், அவர் விரும்பினால், அவர் தமது ஆட்சேபணையைத் தகுந்த முகாந்திரங்களுடன் கூடியதாக, எழுத்துப்பூர்வமாக, இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குள் செயலாளர், கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம், புதுதில்லி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இயக்குநர்கள் குழுவின் ஆணையின் படி
இன்டெலக்ட் டிசைன் அரினா லிமிடெட்–க்காக
ஒப்பம்
V.V.நரேஷ்
நிறுவன செயலர் & இணக்க அதிகாரி

இடம் : சென்னை
நாள் : மார்ச் 26, 2021



...ம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

...MITED, and Printed by D.Rajkumar at Plot B-8 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengalpet Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).